


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.09.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்வில், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஈக்வினிக்ஸ் (Equinix) நிறுவனம், சிப்காட் சிறுசேரி தொழில் நுட்பப் பூங்காவில் 574 கோடி ரூபாய் முதலீட்டில் அமைத்துள்ள தரவு மையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் பு.அலர்மேல்மங்கை, ஈக்வினிக்ஸ் இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மனோஜ் பால், துணைத் தலைவர் பால் வாக்கர் மற்றும் அந்நிறுவனத்தின் உயர் அலுவலர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (19.09.2025) தலைமைச் செயலகத்தில், ஈக்வினிக்ஸ் இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மனோஜ் பால் சந்தித்து, ஈக்வினிக்ஸ் நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு நிதியிலிருந்து (CSR Fund) முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 9 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் பு.அலர்மேல்மங்கை, ஈக்வினிக்ஸ் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.09.2025) சென்னை, தியாகராயர் நகரில், 133வது வார்டு, சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் முகாமிற்கு நேரில் சென்று ஆய்வு செய்தபோது, பிறப்பு சான்றிதழ் வேண்டி விண்ணப்பித்த பயனாளி ஒருவருக்கு உடனடியாக பிறப்பு சான்றிதழ் வழங்கினார். இந்நிகழ்வின்போது, சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி, முதல்வரின் முகவரித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் / சிறப்பு அலுவலர் திருமதி பெ. அமுதா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், மாமன்ற உறுப்பினர் கே.ஏழுமலை, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## வேலூரில் உள்ள

# காவல் பயிற்சிப் பள்ளிக்கு வீரமங்கை வேலுநாச்சியார் பெயர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, செப்.20-**

**"வேலூரில் உள்ள காவல் பயிற்சிப் பள்ளிக்கு வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் பெயர் சூட்டப்படும்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

**இது தொடர்பாக சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை இராணி வேலுநாச்சியார் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவு வருமாறு:-**

விடுதலை வீரர்களின் நினைவைப் போற்றுவதைத் தலையாய கடமையாகக் கருதும் நமது திராவிடமாடல் அரசு பொறுப்பேற்றதில் இருந்து,

அவரது வாழ்க்கை வரலாற்றை விளக்கும் இசையார்ந்த நாட்டிய நாடகம்,

2023ஆம் ஆண்டு டெல்லி குடியரசு நாள் விழா அணிவகுப்பு ஊர்தியில் வேலுநாச்சியார் அவர்களின் திருவுருவச்சிலை எனத் தொடர்ந்து அவரது புகழ்பாடி வருகிறோம்.

அதன் தொடர்ச்சியாக, இந்தியாவின் விடுதலைக்காகப் போராடிய முதல் பெண் போராளி ஆங்கிலேயர்களை வெற்றி கொண்ட வீரமங்கை வேலுநாச்சியாரின் திருவுருவச் சிலையை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் திறந்து வைத்தேன்.

இந்த மகிழ்ச்சிமிகு நாளில், வேலூரில் உள்ள காவல் பயிற்சிப் பள்ளிக்கு வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் பெயர் சூட்டப்படும் எனப் பெருமிதத்துடன் அறிவிக்கிறேன்.

மண் மானம் காக்கப் புயலெனப் புறப்பட்ட வீரத்தாய் வேலுநாச்சியாரின் வரலாறும் அவருக்குத் துணை நின்ற மருது சகோதரர்கள் உள்ளிட்ட தீரமிக்க தமிழர்களின் வரலாறும், இந்த மண் யாருக்கும் தலைகுனியாது எனும் வரலாற்றை உரக்கச் சொல்லும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## சென்னை, தியாகராயர் நகரில் நடைபெற்ற

# "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் ஆய்வு செய்தார்!

## பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும் அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்!

சென்னை, செப்.20-

சென்னை, தியாகராய நகரில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமிற்கு நேரில் சென்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்களுக்கு, அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள்/திட்டங்களை அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்கும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தை 15.07.2025 அன்று முதலமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் கீழ் நடைபெறும் முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், மருத்துவ முகாம்களும் நடத்தப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளிலுள்ள ஒவ்வொரு வார்டிலும் இரண்டு "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்கள் நடத்தப்படுகிறது.

**மனுக்கள் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும்!**

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் தொடர்பாக முதலமைச்சர் அவர்கள் அவ்வப்போது அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டு வருகிறார். இந்த ஆய்வுகளின் போது, தகுதியுள்ள அனைத்து மனுக்களும் தீர்வு காணப்பட வேண்டும் என்றும், வருவாய்த் துறை, கூட்டுறவுத் துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, எரிசக்தி துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை போன்ற முக்கியத் துறைகளின் மனுக்கள் மீது அதிக கவனம் செலுத்திட வேண்டும் என்றும், குறிப்பாக சொத்து வரி, குடிநீர் தொடர்பான கோரிக்கைகள், விவசாய பெருமக்களின் கோரிக்கைகள், ரேஷன் கார்டுகளில் முகவரி மாற்றம், பட்டா சம்பந்தமான மனுக்கள் ஆகியவற்றின் மீது விரைந்து நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மேலும், பெறப்பட்ட மனுக்களை ஆய்வு செய்து, உரிய கால கட்டத்திற்குள் தீர்வு காணப்படுவதை உறுதி செய்திட வேண்டும் என்று அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

அதன் தொடர்ச்சியாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.09.2025) சென்னை, தியாகராயர் நகர், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், 133வது வார்டில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" இரண்டாவது முகாமிற்கு நேரில் சென்று ஆய்வு செய்து, பொதுமக்களிடம் மனுக்களின் விவரங்கள் குறித்தும், முகாமில் செய்து தரப்பட்டுள்ள வசதிகளும் குறித்தும் கேட்டறிந்தார்.

இந்த முகாமில், பிறப்பு சான்றிதழ் வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாக பிறப்பு சான்றிதழ் வழங்கப்பட்டு வருவதையும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அட்டைகள் உடனுக்குடன் பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருவதையும், வங்கிக் கணக்கு தொடங்குவதற்குத் தேவையான உதவிகள் செய்யப்பட்டு வருவதையும் முதலமைச்சர் அவர்கள் பாராட்டினார். மேலும், முகாமில் மனுக்கள் பெறுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட நேரத்தை கடந்து வரும் பொதுமக்களின் மனுக்களையும் பெற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

**கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலிக்க வேண்டும்!**

இந்த ஆய்வின்போது, உங்களுடன் ஸ்டாலின் முகாம் அலுவலர்களிடம், மாற்றுத் திறனாளிகளின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், பட்டா மாறுதல், சொத்து வரி போன்றவை குறித்து பெறப்படும் மனுக்களுக்கு தீர்வு காண முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

தியாகராயர் நகர், 133வது வார்டில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முதல் முகாமில் 852 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. அதே வார்டில் இரண்டாவது முகாம் இன்று நடைபெறுகிறது. மக்களிடம் முகாம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி அதிகளவில் மனுக்கள் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது, முதலமைச்சர் அவர்களை சந்தித்த பொதுமக்கள், அரசுத் துறைகளின் சேவைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்று பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ள உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை பாராட்டியதோடு, உடனடியாக மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு வருவதையும் வரவேற்றனர்.

இந்நிகழ்வின்போது, சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி, முதல்வரின் முகவரித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் / சிறப்பு அலுவலர் திருமதி பெ. அமுதா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், மாமன்ற உறுப்பினர் கே. ஏழுமலை, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## வீரமங்கை ராணி வேலு நாச்சியார் புகழைப் போற்றுகின்ற –பறைசாற்றுகின்ற வகையில்

# சென்னையில் சிலை நிறுவி சிறப்புச் சேர்த்த முதல்வருக்கு நன்றி!

## சிவகங்கை சமஸ்தான தேவஸ்தானம் பரம்பரை அறங்காவலர் ராணி டி.எஸ்.கே.மதுராந்தகி நாச்சியார் அறிக்கை!

**சென்னை, செப். 20 -**

**"வீரமங்கை ராணி வேலு நாச்சியார் புகழைப் போற்றுகின்ற வகையிலும் பறை சாற்றுகின்ற வகையிலும், அவருக்கு சென்னை - கிண்டியில் திருவுருவச் சிலை நிறுவி, சிறப்பான நடவடிக்கை மேற்கொண்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சிவகங்கை சமஸ்தானம் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என சிவகங்கை சமஸ்தான தேவஸ்தானம் பரம்பரை அறங்காவலர் ராணி டி.எஸ்.கே.மதுராந்தகி நாச்சியார், முதல்வருக்கு எழுதியுள்ள வாழ்த்து மடலில் குறிப்பிட்டுள்ளார்.**

அவர், முதல்வர் அவர்களுக்கு அனுப்பிய மடல் வருமாறு:

**முதலமைச்சர் அவர்களுக்கு. வணக்கம்,**



தமிழகத்தில் சிறப்பான ஆட்சியினை நடத்திவரும் முதலமைச்சர் அவர்கள், சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்ட தமிழர்களின் அளப்பறியாப் பங்கு குறித்தும், வீரர்களின் தியாகம் குறித்தும், போராட்டங்கள் குறித்தும், தாய்மொழியான தமிழ்மொழி குறித்தும், வீரம், காலாச்சாரம், பண்பாடு ஆகியவைகளில் பங்குபெற்ற முன்னோர்களை கௌரவிக்கும் பொருட்டும். இதனை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையிலும், பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை தமிழகம் முழுவதும் மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் இந்திய வரலாற்றில் முதல் பெண்மணியாக சுதந்தி ரத்திற்காக தனித்து நின்று போராடிய வீரமங்கை ராணி வேலுநாச்சியார் அவர்களின் புகழை போற்றுகின்ற வகையில் சிவகங்கை மாவட்டத்தில் இவ்வீரப் பெண்மணிக்கு நினைவு மண்டபம் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டு, சிறப்பு சேர்க்கப்பட்டுள்ளது.

மேலும், வீரமங்கை ராணி வேலுநாச்சியார் அவர்களின் புகழை பறைசாற்றுகின்ற வகையில் தற்போது சென்னை, காந்தி மண்டபத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள வீரமங்கை ராணி வேலு நாச்சியார் அவர்களின் திருவுருவச் சிலையினை முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் (19.09.2025) திறந்து வைத்து சிறப்பித்துள்ளார்கள்.

வீரமங்கை ராணி வேலுநாச்சியார் அவர்களின் புகழை போற்றுகின்ற வகையிலும், பறைசாற்றுகின்ற வகையிலும், சிறப்பான நடவடிக்கை மேற்கொண்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சிவகங்கை சமஸ்தானம் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அம்மடலில் குறிப்பிட்டுள்ளார்.

## பகுதிப் பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. தலைமையில்

# வேளச்சேரி மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் "ஓரணியில் தமிழ்நாடு" தீர்மான ஏற்புக் கூட்டம்!

## அமைச்சர்கள் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் - மா.சுப்பிரமணியன் சிறப்புரையாற்றுகின்றனர்!

*சென்னை, செப். 20*

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம் நாளை (21.09.2025 ஞாயிற்றுக்கிழமை) காந்தி ரோடு, வேளச்சேரியில் நடைபெறுகிறது.

வேளச்சேரி மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. தலைமை வகிக்கிறார்.

வேளச்சேரி மணிமாறன் எம்.சி, வேளச்சேரி எஸ். பாஸ்கரன் எம்.சி, மகேஸ்வரி முருகவேல் எம்.சி, கழக த.ரமேஷ், வழக்கறிஞர் த.ஜெகதீசன், சி.பழனி, எம்.ஏ.சங்கர், சே.மைதிலி, ந.டில்லிகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வட்டக் கழகச் செயலாளர்கள் பொ.த.மதிவாணன், ஜி.பி.எஸ்.பாலசதீஸ், ஆர். பார்த்திபன், கே.என். தாமோதரன், தே.கோபி, எஸ்.முருகவேல், க.பாரதிதாசன், வி.சக்திவேல் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் தகவல் தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்க பாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த்ரமேஷ், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநில கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை பொதுக் குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற னர்.

நிகழ்ச்சி இறுதியில் போ.த.எழில்வாணன் நன்றி கூறுகிறார்.




சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இயங்கி வரும் கலைஞர் மகளிர் திறன் மேம்பாட்டு மையத்தில் தையல் பயிற்சி மற்றும் அழகு கலை பயிற்சி முடித்த 3 & 4 தொகுதி(Batch) 280 மாணவியர்களுக்கு அமைச்சர் – சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் தலைமையில் திரைப்பட நடிகை தேவயானி அவர்கள் கலந்து கொண்டு சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், களக்காடி எல்லப்பன், மின்னல் கந்தப்பன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர். கிருஷ்ணகுமார், கோட்டூர் பிரகாஷ், மாவட்ட அமைப்பாளர்கள் நாடிமுத்து மணிகண்டன், கோ.பாஸ்கரன், வட்டக் கழக செயலாளர்கள் எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, சை.மு.சேகர், நா.தமிழரசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் மாணவியர்கள் திரளாக கலந்து கொண்டனர்.